இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

**“சிறு குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள்” என்ற வார்த்தைகளைச் சொல்லி, தொந்தரவு செய்யும் குழந்தைகளை விரட்ட முயன்ற சீடர்களை, இயேசு கடிந்து கொண்டது போல, நாமும் நம்மைத் குழந்தைகளின் நிலைக்குத் தாழ்த்தும் மனத்துணிவு இருந்தால், மனிதகுலத்தின் போக்கு மாற்றம் பெறும்.**

# குழந்தைகளுடன் திருத்தந்தை 14ஆம் லியோ!


குழந்தையுடன் அரைமண்டியிட்ட நிலையில் திருத்தந்தை

திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இரண்டு மாதங்கள் ஆன நிலையில், அவரைப் பற்றி வெளியாகிவரும் புகைப்படங்கள் மிகவும் ஆழமான அர்த்தங்களை கொண்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின், புனித பேதுரு பெருங்கோவிலின் வளாகத்தின் மையக் குவிமாடத்திலிருந்து வழங்கிய சிறப்பு ஆசீர்வாதத்தின் போது, மகிழ்ச்சியில் திளைத்திருந்த மக்கள் கூட்டத்தைப் பார்த்து, திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் வெளிப்படுத்திய உணர்வுகளைப் போன்ற சில காட்சிகளும் அவற்றில் அடங்கும்.

மேலும், மற்றுமொரு அறிய புகைப்படமாக, குழந்தைகளுக்கான வத்திக்கான் கோடை முகாமின் போது திருத்தந்தை, ஒரு சிறுமியின் அருகில், அரைமண்டியில் அமர்ந்தவாறு, ஒரு வரைபடத்தைக் காட்டுகிறார். இந்தப் புகைப்படம் எதிர்காலத்திற்கான ஒரு செய்தியையும், ஒரு புதுப்பார்வையையும் தாங்கி நிற்கிறது.

இந்தப் புகைப்படத்தில் திருத்தந்தை புன்னகையுடன் புகைப்படம் எடுக்கும் நபரை பார்க்கிறார், அதேவேளையில், இந்தத் தருணத்தால் ஈர்க்கப்பட்ட சிறுமி புகைப்படக் கருவியைப் பார்க்காமல், தனது புன்னகை நிறைந்த பார்வையை திருத்தந்தையின் மீது பதிக்கிறார்.

வத்திக்கானின் கோடைக்கால முகாமில் எடுக்கப்பட்ட இந்தப் புகைப்படத்தில், சிறுமியின் நிலைக்கு ஏற்றவாறு தாழ்ந்து அமரும் திருத்தந்தை, தனது செயல் வழியாக, உலகில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டிய திசையைக் காட்டுகிறார்.

குழந்தைகளை அவர்களின் நிலையில் இருந்து நோக்கி, உலகை அவர்களின் கண்கள் வழியாகப் பார்க்க வேண்டும் என்ற கருத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ள இப்புகைப்படம் நம்மை வியப்பூட்டுவதற்கான காரணமாக அமைகிறது.

“சிறு குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள்” என்ற வார்த்தைகளைச் சொல்லி, தொந்தரவு செய்யும் குழந்தைகளை விரட்ட முயன்ற சீடர்களை, இயேசு கடிந்து கொண்டது போல, நாமும் நம்மைத் குழந்தைகளின் நிலைக்குத் தாழ்த்தும் மனத்துணிவு இருந்தால், மனிதகுலத்தின் போக்கு மாற்றம் பெறும்.

வலிமையானவர்கள் சிறியவர்களைப் பாதுகாக்க வேண்டும். ஆனால் இதற்கு நேர்மாறாக, பெரியவர்களால் தீர்மானிக்கப்படும் போர்களில் குழந்தைகள் தாம் முதலில் பாதிக்கப்படுகின்றனர்.

”இந்த உலகில் உண்மையான அமைதியை நாம் நிலைநாட்ட வேண்டுமென்றால், போருக்கு எதிராக ஓர் உண்மையான போரை நடத்த வேண்டுமென்றால், நாம் குழந்தைகளிடமிருந்து தொடங்க வேண்டும்” என்று மகாத்மா காந்தி கூறியுள்ளார்.

பெரு நாட்டில், திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள், ஆயராகவும் மறைப்பணியாளராகவும் பணியாற்றிய போது, குழந்தைகளை அவர்களின் நிலைக்கு இறங்கி வந்து சந்தித்த எண்ணற்ற புகைப்படங்கள், அவரின் எளிய மனதிற்குச் சான்றாக உள்ளன.

தற்போது உரோமை மறைமாவட்டத்தின் ஆயரான பின்பும், திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள், தனது தனித்துவம் மாறாமல் செயல்படுகிறார் என்பதை வத்திக்கான் கோடைக்கால முகாமில் குழந்தைகளுடன் அவர் இருக்கும் புகைப்படம் நமக்கு நினைவூட்டுகிறது.

ஜெர்சிலின் டிக் ரோஸ் - வத்திக்கான்

# உங்களின் அழுக்குரல் கடவுளின் இதயத்தை எட்டியுள்ளது!


இஸ்ராயேல் தாக்குதலுக்கு உள்ளான பாலஸ்தீன கல்விக்கூடம்

உங்களின் அழுக்குரல் கடவுளின் இதயத்தை எட்டியுள்ளது! என்று ஓர் இதழ் ஒன்றில் கூறியுள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

ஜூலை மாத Piazza San Pietro என்ற இதழில், மூன்று குழந்தைகளின் இளம் தாயான ஜைரா என்பவர், அமைதிக்கான உரிமைக் குறித்து துணிவுடன் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் விதமாக இவ்வாறு கூறியுள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

மேலும் "போரினால் எல்லாம் அழிந்துவிட்டால் நமக்கு என்ன நடக்கும்?" என்று கேட்கும் Benevento-வைச் சேர்ந்த இளம் தாயான ஜைராவின் இதயப்பூர்வமான கேள்விக்குப் பதிலளித்துள்ள திருத்தந்தை, உங்களின் வார்த்தை, "கடவுளின் இதயத்தை அடையும் ஓர் அழுகை" என்றும், அமைதி என்பது வெறும் ஆசை மட்டுமல்ல, அன்றாடத் தனிப்பட்ட பொறுப்பு என்றும் அவரிடம் வலியுறுத்தியுள்ளார்.

விசுவாசிகள் மற்றும் விசுவாசிகள் அல்லாதவர்கள் அனைவரும், உள் மாற்றத்தைத் தேடவும், உரையாடல், இறைவேண்டல் மற்றும் துணிவுமிகு செயல்கள் வழியாக, அமைதியை நோக்கி உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவும் கேட்டுக்கொண்டுள்ளார் திருத்தந்தை.

மறைந்த முன்னாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வார்த்தைகளைப் பிரதிபலிக்கும் விதமாக அதிகாரத்தை விடுத்து, மோதலில் "சந்திப்பு கலாச்சாரத்தை" வளர்ப்பதன் அவசியத்தை எடுத்துக்காட்டிய திருத்தந்தை, "போர் ஒருபோதும் வெற்றிபெறாது", மேலும் குழந்தைகள் உண்மையான மற்றும் நீடித்த அமைதிக்குத் தகுதியானவர்கள்" என்ற அவரின் வார்த்தைகளையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# படைப்பைப் பாதுகாப்பதும் பராமரிப்பதும் நமது கடமை!



பூமியின் மற்றும் ஏழைகளின் அழுகையை நாம் கேட்கிறோம், ஏனென்றால் இந்தக் கூக்குரல் கடவுளின் இதயத்தை எட்டியுள்ளது என்றும், நமது கோபம் அவருடைய கோபமாக வெளிப்பட்டுள்ளது, நமது பணியே அவருடைய பணியாகவும் அமைந்துள்ளது என்றும் கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

உரோமைக்கு அருகிலுள்ள காஸ்தல் கந்தோல்போ கோடை விடுமுறை இல்லத்தில் நிறைவேற்றிய திருப்பலியில் இவ்வாறு கூறிய திருத்தந்தை, மறைந்த முன்னாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எழுதிய திருமடலான 'இறைவா உமக்கே புகழ்' குறித்தும் தனது மறையுரையில் குறிப்பிட்டார்.

அச்சம் மற்றும் குழப்பத்தின் மத்தியில் நம்பிக்கையை அடையாளப்படுத்த புயலை அமைதிப்படுத்திய இயேசுவின் விவிலிய நிகழ்வைப் பயன்படுத்தி (மத் 8:23-27), புதிய வாழ்க்கையையும் அமைதியையும் கொண்டுவரும் அவரின் வலிமையைக் குறித்து தனது மறையுரையில் எடுத்துக்காட்டினார் திருத்தந்தை.

இந்தப் பகுதி இயேசுவின் படைப்புடன் உள்ள ஆழமான தொடர்பை வலியுறுத்துகிறது என்றும், மறைந்த முன்னாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் தொலைநோக்குப் பார்வையால் ஈர்க்கப்பட்டு, உலகத்தைப் பற்றிய சிந்தனைமிக்க, கவனமுள்ள அணுகுமுறையைக் கோருகிறது என்றும் குறிப்பிட்ட திருத்தந்தை, இயேசுவே திருஅவையின் படைப்பாளர் மற்றும் தலைவர் என்பதையும், படைப்பைப் பராமரிப்பதும் அமைதியை மேம்படுத்துவதும் ஒரு பகிரப்பட்ட பணி என்பதையும் இது நமக்கு நினைவூட்டுகிறது என்றும் எடுத்துக்காட்டினார்.

மேலும் திருவிவிலியத்திலிருந்தும், புனித பிரான்சிஸ் அசிசி மற்றும் புனித அகுஸ்தினார் போன்ற புனிதர்களின் வாழ்விலிருந்தும் இதுதொடர்புடைய சில பகுதிகளை அவர்களுக்குச் சுட்டிக்காட்டிய திருத்தந்தை, அனைத்து உயிரினங்களையும் சகோதரர் சகோதரிகளாக நோக்குவதன் முக்கியத்துவத்தையும், அன்பு மற்றும் பொறுப்பு வழியாக நல்லிணக்கத்தை மீட்டெடுப்பதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

இறுதியாக, படைப்புடன் இணக்கமாக வாழ்வதையும், பாவம் மற்றும் அநீதியிலிருந்து விலகுவதையும், சுற்றுச்சூழல் மற்றும் சமூக நெருக்கடிகளை நிவர்த்தி செய்வதற்கான ஒரு வழியாக நல்லிணக்கத்தை வளர்ப்பதையும் ஊக்குவித்த திருத்தந்தை, இந்தக் குணப்படுத்தும் பயணத்தில் பங்களிக்க அனைவருக்கும் அழைப்புவிடுத்து தனது மறையுரையை நிறைவு செய்தார்.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# உலு ரெமிஸ் தோட்டத்தின் புனித தோமையார் திருவிழா

கடந்த ஜூலை 4-ஆம் நாளன்று உலு ரெமிஸ் தோட்டத்தில் புனித தோமையார் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திருப்பலியை நிறைவேற்றிய அருட்பணியாளர் எட்ரியன் பிரான்சிஸ் அவர்கள், தமது மறையுரையில் 'நம்பிக்கை ஒருபோதும் ஏமாற்றம் தராது' எனும் உரோமையர் 5:5-யில் உள்ள வசனத்தை எடுத்துரைத்து நாமும் மனம் தளராமல் செபத்தில் உறுதி உள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். நமது மன்றாட்டுகள் கேட்கப்படும் எனும் நம்பிக்கை நமது உள்ளத்தில் ஆழமாக பதிய வேண்டும். புனித தோமையார் போல 'என் ஆண்டவரே, என் கடவுளே' என ஆண்டவரிடம் சரணடைவோம் என போதித்தார்.

சுற்று வட்டாரத்தில் இருந்து சுமார் 150 விசுவாசிகள் கலந்து கொண்டுச் சிறப்பித்தனர். ஆலய சுற்று பவனியுடன் நடைப்பெற்ற இத்திருவிழாவில் கலந்துக் கொண்ட அனைவருக்கும் சகோதரர் புருட்டஸ் நன்றி கூறினார். இரவு உணவுடன் திருவிழா இனிதே நிறைவு எய்தியது.

செய்தி: ஆ.வி.டேவிட்







# இரு தூண்கள் ஒரே பணி
## தமிழ் இளைஞர் இறை அழைப்பு முகாம்-2025




செகாமட்: மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத்தில் முதன்முறையாக தமிழில் நடைபெற்ற இறை அழைப்பு முகாம் "இரு தூண்கள்; ஒரே பணி" எனும் கருப்பொருளில் 2025 ஜூன் 27 முதல் 29 வரை செகாமட்டில் உள்ள புனித பிலிப்பு தேவாலயத்தில் உற்சாகமாக நடைபெற்றது. இந்த முகாமில் 18 வயதிற்கு மேற்பட்ட, திருமணம் ஆகாத சுமார் 60 இளையோர்கள் பங்கேற்றனர். மறைமாவட்டத்தை உட்படுத்திய 'CIC, CDM, CTK, 'STC, SLK, SJC, SFX, SAC, SPC மற்றும் St. Anthony, Chaah' ஆகிய பங்குத் தேவாலயங்களைச் சேர்ந்த இளைஞர்கள் குழுக்களாக கலந்துக் கொண்டனர்.



முகாமின் நோக்கம், புனித பேதுரும் பவுலும் போலத் தங்கள் வாழ்வில் இறைவனின் அழைப்பை அறிந்து, அதனை உணர்வதற்கும் ஆராய்வதற்கும் வாய்ப்பளிக்கச் செய்யும் சூழலை உருவாக்குவதாக இருந்தது.

இந்த முகாம் அருட்பணியாளர் அட்ரியன் பிரான்சிஸ் அவர்களின் தலைமையில் நடத்தப்பட்டது. ஆன்மீக வழிகாட்டியாக அருட்சகோதரி எவேலின் எலியாஸ் (FDCC) பங்கேற்றார். முகாமின் ஒருங்கிணைப்பாளராக திரு. கெவின் ராஜ் புருட்டஸ் முக்கிய பங்காற்றினார்.

முகாமின் நினைவில் நிலைக்கும் தருணங்கள், ஆன்மீக உணர்வும் மகிழ்ச்சியும் கலந்த தருணங்களாக அமைந்தன. புனித பேதுரு, பவுலின் வாழ்க்கையைத் தழுவிய இரவு அமர்வுகள், இளைஞர்களை ஆழமான சிந்தனையில் ஆழ்த்தின. அவர்கள் தங்களுடைய வாழ்க்கை நோக்கைச் சுயமாக ஆய்வு செய்யத் தூண்டின. இரவு நேரத்தில் நடந்த ஜெபமாலை, புகழ் பாடல்கள் நற்கருணை ஆராதனை – CDM குழுவின் இசையோடு இணைந்து – ஆன்மீக அமைதியை உருவாக்கியது.



முகாமின் இரண்டாம் நாளில், கனோஷியன் மடத்தில் அருட்சகோதரி எவேலின் அவர்களுடன் சேர்ந்து இளைஞர்கள் சேவை அனுபவத்தில் ஈடுபட்டனர். இது தன்னலமற்ற அன்பையும், அர்ப்பணிப்பையும் நேரடியாக உணர்த்தியது. அதேநேரம், மெர்லிமாவ் குழுவின் குழு விளையாட்டுகள் இளைஞர்களிடையே ஒத்துழைப்பு, நட்பு, ஒற்றுமை ஆகிய பண்புகளை ஊக்கப்படுத்தின.

முகாமின் மூன்றாம் நாள், ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனிப்பட்ட இறை அழைப்பு குறித்து சொற்பொழிவுகள் வழங்கப்பட்டன. அருட்பணியாளர் அட்ரியன் அவர்கள் குருத்துவம் (Priesthood) குறித்தும், அருட்சகோதரி எவேலின் அவர்கள் கனோசியன் துறைவியல் வாழ்க்கை (Religious Life), Friends of Canossa மற்றும் Lay Canossians பற்றியும் விரிவாக விளக்கினார். இவை இளைஞர்களுக்குள் அவரவர் அழைப்பைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனையை உருவாக்கின என்பதில் ஐயமில்லை. இந்த பகிர்வின் முடிவில் நடைபெற்ற திருப்பலி, அனைவரது உள்ளங்களையும் நெகிழ வைத்த, ஆன்மீக நிறைவு தரும் தருணமாக அமைந்தது.









2025ஆம் ஆண்டின் முகாம் வெற்றிகரமாக நிறைவடைந்தது.

"இரு தூண்கள்; ஒரே பணி" எனும் கருப்பொருளின் வழியாக, இளைஞர்கள் தங்கள் வாழ்வில் இறை அழைப்பை உணர்ந்து, அதை ஆராயும் பயணத்தைத் தொடங்கத் தூண்டியது என எரிதும் நம்புகிறோம். இந்த முகாம், அவர்களுக்கான ஒரு முக்கியத் தூண்டுதலாகவும், ஆழமான வழிகாட்டுதலாகவும் அமைந்தது என்பதை உணர்ந்து இறைவனை துதிக்கிறோம்.

முகாமின் இறுதியில், ஒருங்கிணைப்பாளர் திரு. கெவின் ராஜ் புருட்டஸ் அவர்கள் இறை அழைப்பு குழுவின் ஆலோசகராகச் சேவையாற்றிய அருட்பணியாளர் அட்ரியன் பிரான்சிஸ், ஆன்மீக வழிகாட்டி அருட்சகோதரி எவேலின், நன்கொடையாளர்கள், செயற்குழுவினர் மற்றும் பங்கேற்ற அனைத்து இளைஞர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

தீனா மெக்டலின் டெனிஸ், மலாக்கா

# நாம் ஒருவருக்கொருவர் கடமைப்பட்டதைச் செய்வோம்!

விருந்தோம்பல் என்ற கருப்பொருளை இன்றைய வாசகங்கள் வலியுறுத்துகின்றன. இது ஆபிரகாமும் (அவரது மனைவி மற்றும் குடும்பத்தினரும்) மார்த்தாவும் தங்கள் இல்லத்திற்கு வருகைத் தந்தவர்களை எவ்வாறு கவனிக்கிறார்கள் என்பதில் அடங்கியுள்ளது. ஒருவர் சேவை செய்கிறார், மற்றவர் உட்கார்ந்து கேட்கிறார்,

கொலோசேயருக்கு எழுதிய கடிதத்தில், பவுல் தனது துன்பங்களை ஆண்டவராகிய இயேசுவுக்கு சேவை செய்வதற்கும், நற்செய்தியை அறிவிப்பதற்குமான வழிகளாகக் காண்கிறார்.ஆம், தவறான போதனைகளைப் போதிக்கும் போலி போதகர்களை தனது உடல் ரீதியான வேதனையாக கருதுகிறார்.

"ஆண்டவருடைய பாதத்தில் மரியாள் உட்கார்ந்து, அவர் பேசுகிறதைக் கேட்டுக்கொண்டிருந்தாள். மார்த்தாள் அதிக வேலைகளைச் சுமந்து, அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, என் சகோதரி என்னைத் தனியே பணிவிடை செய்ய விட்டுவிட்டதைக் குறித்து உமக்குக் கவலையில்லையா?" என்றாள்.

இன்றைய நற்செய்தி நமக்கு இரு பெண்களை அறிமுகப்படுத்துகிறது: மார்த்தாள், இவர்கள் இருவரும் இயேசுவுக்கு சேவை செய்ய ஆர்வமாக உள்ளனர், ஆனால் அவர்கள் அதை வெவ்வேறு வழிகளில் செய்கிறார்கள். ஆனால், ஆண்டவரோ, "மார்த்தா, மார்த்தா! நீ பலவற்றைப் பற்றிக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். ஆனால் தேவையானது ஒன்றே. மரியாவோ நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள்; அது அவளிடமிருந்து எடுக்கப்படாது" என்றார்.

கடவுள் நம்மை இரு கண்கள், இரு காதுகள், ஆனால் ஒரே நாக்குடன் படைத்ததற்கு இதுவே காரணமாக இருக்கலாம். நாம் குறைவாகப் பேச வேண்டும், ஆனால் குறிப்பாக நம் இதயங்களில் அதிகமாகப் பார்க்கவும் கேட்கவும் வேண்டும் என்று அவர் விரும்புகிறார். கட்டுப்பாடற்ற, அமைதியற்ற இதயத்திடம் கடவுள் பேச முடியாது.

மார்த்தாளின் விருந்தோம்பலை இயேசு பாராட்டவில்லை என்று அர்த்தமல்ல. ஆனால் பல விடயங்களைப் பற்றி மிகவும் கவலையாகவும் வருத்தமாகவும் இருந்ததற்காக அவர் அவளைக் கடிந்துகொண்டார். இயேசுவுடனான தனது உறவில் மிக முக்கியமான ஒரு அம்சத்தை அவள் மறந்துவிட்டாள். அதாவது, ஒரு நண்பர், ஒரு அன்பானவர், எல்லாவற்றிற்கும் மேலாக, தனது ஆண்டவரும் மீட்பருமானவர் சொல்வதைக் கேட்க நேரம் ஒதுக்குவது இன்றியமையாதப் பண்பாகும்.

நம் அனைவரிலும், மார்த்தாவும் மரியாளும் இருக்கிறார்கள். நாம் உடலும் ஆன்மாவும். இரண்டையும் சமநிலையில் வைத்திருக்க வேண்டும். நாம் ஒருவருக்கொருவர் கடமைப்பட்டதைச் செய்ய வேண்டும். இயேசுவுக்கு தனக்காக வேலை செய்பவர்கள் தேவையில்லை. அவருடைய வேலையைச் செய்பவர்கள்தான் அவருக்குத் தேவை.

https://justmehomely.wordpress.com/2013/06/15/sixteenth-sunday-in-ordinary-time-year-c/

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.